## அவசரக் கூட்டம்

**கூட்ட எண் – 04 / 2020** **திருத்தணி நகராட்சி,**
**நாள்: 21.02.2020**

நிகழும் விகாரி ஆண்டு, மாசி மாதம் – 9, திருவள்ளுவர் ஆண்டு 2051 நாள்.21.02.2020 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அசவசரக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

இந்நகராட்சியில் பகுதியில் கீழ்கண்ட பணிகளுக்கு 14.02.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | காமராஜர் நாளங்காடியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 5.00 | 1. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர்<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திருமதி.வி.மேனகா, ஒப்பந்ததாரர்<br>1.00 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை (Burst) 03/2020–ஆம் மாதம் வரை பராமரிப்பு செய்தல் பணி | 6.00 | 1. திரு.கே.வாசு<br>வரிசை எண்.1 முதல் 29 வரை அனைத்து பொருட்களுக்கும் விலை குறைவு<br>மற்றும் வரிசை எண்.30 விலை அதிகம்<br>2. திரு. கே. ஆறுமுகம்<br>வரிசை எண்.1 முதல் 29 வரை அனைத்து பொருட்களுக்கும் விலை அதிகம்<br>மற்றும் வரிசை எண்.30 விலை குறைவு |
| 3 | இந்நகராட்சி அறிஞர் பேருந்து நிலையத்தில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2016–17–ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதினை நீக்கம் செய்தல் பணி. | 0.12 | 1.OZONE Technologies,<br>0.26% மதிப்பீட்டை விட குறைவு<br>2. HI Tech Sweet Water Technologies Pvt Ltd.,<br>1.05% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | இந்நகராட்சி மா.பொ.சி சாலையில் (ரயில் நிலையம் எதிரில்) அமைந்துள்ளஅம்மா உணவகத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுது நீக்கும் பணி. | 0.44 | 1.OZONE Technologies,<br>0.26% மதிப்பீட்டை விட குறைவு<br>2. HI Tech Sweet Water Technologies Pvt Ltd.,<br>1.05% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 5 | இந்நகராட்சி அலுவலகத்தில் (100 litres per Hr) புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் அமைத்தல் பணி | 1.00 | 1.OZONE Technologies, 0.26% மதிப்பீட்டை விட குறைவு<br>2. HI Tech Sweet Water Technologies Pvt Ltd., 1.05% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :–

1. மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.191/2019/இ1)

பொருள் எண்– 2

இந்நகராட்சியில் பகுதியில் கீழ்கண்ட பணிகளுக்கு 21.02.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்ககும் வாகனம் எண். TN 20 CA 4542–னை தகுதி சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல் பணி. | 2.15 | 1. திருவாளர்.சக்தி பாடி ஒர்க்ஸ், பூந்தமல்லி<br>0.29 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திருவாளர்.செந்தில் முருகன் ஒர்க்ஸ், பூந்தமல்லி.<br>1.05 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்ககும் வாகனம் எண். TN 20 BJ 6548, TN 20 CS 9316, TN 20 CS 9258, TN 20 CS 9326, TN 20 CS 9327, TN 20 CS 9284-க்கு ஆயில் சர்வீஸ் செய்யும் பணி. | 0.70 | 1. திருவாளர்.சக்தி பாடி ஒர்க்ஸ், பூந்தமல்லி<br>0.21 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திருவாளர்.செந்தில் முருகன் ஒர்க்ஸ், பூந்தமல்லி.<br>0.85 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | 15 எண்ணிக்கை (Battery operated Vehicle) சேமிப்பு மின் கலத்தின் மூலம் இயங்கும் வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்தல் பணி | 1.18 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை |
| 4 | இயந்திரத்துடன் கூடிய சோடியம் ஹைபோ குளோரைடு திரவம் (Liquid Chlorine) சப்ளை செய்தல் பணி.<br>1. வார்டு எண்.1, ஏரிக் கரை ஆழ்துளை கிணறு<br>2. வார்டு எண்.20, ஸ்ரீ சாய் பாபா நகர் | 4.40 | 1. திருவாளர்.ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், ஆவடி, சென்னை –54<br>0.15% மதிப்பீட்டை விட குறைவு<br>2.திருவாளர். ஸ்ரீ ராஜகணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், ஆவடி, சென்னை –54<br>1.30 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆழ் துளை கிணறு<br>3. வார்டு எண்.12, தர்மராஜா கோயில் தெருவில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு | | |
| 5 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனுமந்தாபுரம், மேட்டுத் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வேலி அமைத்தல் பணி. | 2.00 | 1. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர்<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திருமதி.வி.மேனகா, ஒப்பந்ததாரர்<br>1.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்கண்ட பணிகளில் வரிசை எண்.1,2,4,5 ஆகிய பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரிசை எண்.3–ல் கண்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப் பெறாததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 3**

திருத்தணி நகராட்சி, திருப்பதி நெடுஞ்சாலையில் அமைத்துள்ள இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 21 வார்டுகளை உள்ளடக்கியது, முருகப்பெருமானின் அறு படைவீடுகளில் ஒன்றான அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில் அமைந்துள்ள இடம் திருத்தணி நகராட்சி ஆகும். 2011 கணக்கெடுப்பின்படி இந்த நகராட்சியின் மக்கள் தொகை 44781 ஆகும். அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 10,000 பேர் வருகை புரிகின்றனர், மேலும் ஆடிகிரத்திகை திருவிழாவின் போது வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து 5 லட்சம் முதல் 7 லட்சம் பக்தர்கள் வருகை புரிகின்றனர், மேலும் திருப்படி திருவிழா முன்னிட்டு திருக்கோவிலுக்கு சுமார் 3 லட்சம் பக்தர்கள் இந்நருக்கு வருகை புரிகின்னறர். மேலும் இந்நகராட்சி பகுதியில் 10814 குடியிப்புகளும் 2340 வணிக அடிப்படையிலான வரிவிதிப்புகளும் உள்ளது.

மேலும் இந்நகராட்சி பகுதியில் 35 திருமண மண்டபங்கள், 50–க்கு மேற்பட்ட உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் அமைந்துள்ளது, மேற்படி குடியிருப்புகள், வணிக பயன்பாடு, திருமண மண்டபங்கள், உணவு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள் இருந்து வரும் கழிவு நீர் நந்தி ஆறு, திருத்தணி பெரிய ஏரி, திருத்தணி ஏரி மற்றும் ஜோதி நகரில் உள்ள ஏரி ஆகியவற்றில் கலந்து மாசு ஏற்படுகிறது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் மேற்படி ஏரி மற்றும் ஆறுகளில் கழிவு நீர் கலக்காத வண்ணம் திட்டம் தயாரிக்க அறிவுறுத்தப்பட்டது, மேலும் இந்நகராட்சி ஆறுபடை வீடுகளில் ஒன்றான அருள்மிகு சுப்பிரமணி சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளதால் பாதாள சாக்கடைத் திட்டம் மிகவும் அவசியமாகிறது.

இந்நகராட்சியில் ஏற்கனவே பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற உரிய விரிவான திட்ட அறிக்கை 2011–12–ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது திருத்தணி நகரம் பெருமளவு வளர்ந்துவிட்டபடியாலும் மக்கள் தொகையும் உயர்ந்துவிட்டபடியாலும் புதியதாக விரிவான திட்ட அறிக்கையினை அரசு நிறுவனமான TWIC Consultancy மூலம் தயாரிக்கவும், இந்நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினால் திட்ட அறிக்கை தயார் செய்து வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், எம்.ஆர்.சி நகர், சென்னை –28 அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், எம்.ஆர்.சி நகர், சென்னை –28 அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.288/2006/அ1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**